
# காரண சரீரம்



ப்ரக்ஞன்

# நூல் விபரம்

| | | |
|---|---|---|
| **நூலின் பெயர்** | : | காரண சரீரம் |
| **தெளிவுரை** | : | ப்ரக்ஞன் [Prajnan] |
| **வகை** | : | உபதேசம் |
| **முதற்பதிப்பு** | : | 2020 |
| **வெளியீடு** | : | பராபரம் |
| **பக்கங்கள்** | : | 47 |
| **விலை** | : | அக விழிப்பு |

**பதிப்பாளர்** : ஓம் கிராபிக்ஸ்
கோயமுத்தூர்.

# காரண

# சரீரம்

ஆக்கம்

## ப்ரக்ஞன்

ஸ்ரீ குருப்யோ நம:

# காரண சரீரம்

## (விளக்கம்)

எந்த சரீரத்தைப் பற்றி அவ்வளவு எளிதாக விளக்க முடியாதோ?, எதற்கு ஆரம்பம் இல்லையோ?, எதில் அறியாமையும், அறிவும் ஒன்றாகக் குடி கொண்டிருக்கிறதோ?, எது ஸ்தூலம் மற்றும் சூக்குமம் என்ற இரண்டு சரீரங்களுக்கும் காரணமாக உள்ளதோ?, எது தனது உண்மைத் தன்மையைப் பற்றி அறியாமல் இருக்கிறதோ?, அத்துடன் எது மாறுபடாத உருவில், அப்படியே இருக்கிறதோ? - அதுதான் "**காரண சரீரம்**" எனப்படுகிறது.

அதாவது, ஸ்தூல, சூக்கும சரீரங்களுக்குக் காரணமாக இருப்பது, '**காரணச் சரீரம்**' எனப்படுகிறது. அந்த காரண சரீரத்தில், ஸ்தூல - சூக்கும சரீரங்கள் விதைப்போன்று மாற்றத்துக்கு முந்தைய மூல நிலையில் இருக்கின்றது.

ஆக, ஒவ்வொரு மனிதனின் தகுதிகள், சாதனைகள், நிறைவேற்றிய செயல்கள் எல்லாம், விதை (பீஜ) வடிவில் அந்த காரண சரீரத்தில் காத்துக் கொண்டிருக்கின்றன.

## காரண சரீரம்

இந்த காரண சரீரம் மாற்றமடையாமல், அப்படியே இருப்பதற்குக் காரணம், இது கால, தேசங்களுக்கு அப்பாற்பட்டது. அதனால், அதை எல்லோராலும் எளிதாக விளங்கிக் கொள்ள முடியாது. அத்துடன், அதை அவ்வளவு எளிதாக விளக்கவும் முடியாது என்பதினால், அதை "**அனிர்வசனீயம்**" என்று சாஸ்திரம் கூறுகிறது.

அதாவது, **அனிர்வசனீயம்** என்றால், '**விளக்க முடியாதது**' என்று பொருள். ஏனென்றால், அது மாற்றங்களற்ற நிலையில் "**நிர்விகல்ப ரூபமாக**" உள்ளது.

நிர்விகல்பம் என்றால், விகல்பம் அற்ற நிலை எனலாம். விகல்பா என்பது ஒரு சமஸ்கிருதச் சொல்லாகும். இது மனதில் உள்ள ஐந்து வகையான எண்ணங்கள் அல்லது செயல்பாடுகள் மற்றும் இயக்கங்களில் ஒன்றைக் குறிக்கிறது. இவைகளையும், சமஸ்கிருதத்தில் விருத்திகள் என்று அழைக்கப்படுகின்றன. அதாவது, எளிதாகப் புரிந்துக் கொள்ள வேண்டுமென்றால், நிர்விகல்பம் என்றால், கால, தேசங்கள் அற்றது என்று பொருள்.

பொதுவாக, ஸ்தூல, சூக்கும உடல்கள் பஞ்சபூதங்களால் ஆனதால், ஸ்தூல சரீரம் என்பது ஸ்தூல பஞ்சபூதங்களால் உண்டாகி, நம் கண்களுக்குப் புலப்படுகிறது. அவ்வாறே, கண்களுக்குப் புலப்படாத சூக்கும சரீரம் என்ற '**மனம்**' சூக்கும பஞ்ச பூதங்களால் உண்டானது.

ஆகவே, ஆழ்ந்த உறக்கத்தில், இந்த ஸ்தூல உடல் மற்றும் சூக்கும மனம் ஆகிய இரண்டும், உதித்த இடமாகிய காரண உடலில் சென்று மீண்டும் ஒடுங்குகிறது. அவ்வாறு அவைகள் தன்னை அறிய முடியாமல் ஒடுங்கிய அந்த காரணச் சரீரத்துக்கென்று ஒரு உருவமும் உண்மையில் இல்லை.

எனவே, அதைப்பற்றி விளக்கவோ, விவரிக்கவோ முடியாது என்கிறது சாஸ்திரம். ஆக, உண்மையில் காரண சரீரம் என்பது அந்தராத்மாவின் கொள்கலன் ஆகும்.

அதாவது, அந்த காரண சரீரத்தை "**ஈஸ்வர சித்தம்**" என்று கூறலாம்.

அந்த ஈஸ்வர சித்தத்தின் வெளிப்பாடாக உண்டான சூக்கும பிரபஞ்ச மனம் தன் சூக்கும எண்ணங்களை பல்வேறு ஸ்தூல உடல்களாக வெளிப்படுத்திக் கொண்டபோது, விளைந்த தன்முனைப்பு (Ego) அல்லது அஹங்காரம் என்பது, அறிவுக் குறைவான மற்ற உயிரினங்களிடம் தனித்துவமாக மாறாமல், அந்த ஈஸ்வர சித்தத்தின் ஒத்திசைவுடன் ஒவ்வொரு உடல்களிலும் செயலாற்றுகின்றன.

ஆனால், இதிலே, மனிதன் மட்டுமே, தனக்கு கிடைத்துள்ள மகத்தான ஆறாவது அறிவாகிய பிரத்யேக பகுத்தறிவினால், தன்னுடைய அறிவுக்கு ஆதாரமான அந்த ஈஸ்வர சித்தம் வெளிப்பட்டு இருப்பதை தகர்த்து, தானே வெளிப்படுத்துகின்ற **தன்முனைப்பு (Ego) அல்லது அஹங்காரம்**

என்பதாகக் கருதிக்கொண்டு, தனித்துவமான தன்னுடைய செயல்களாக எல்லாவற்றையும் கருதிக்கொண்டு, இதை '**நான் செய்தேன்**', '**அது என்னுடையது**' என்பது போன்ற அஹங்கார, மமகாரத்தில் சிக்கிக் கொண்டு, தன்னை தனித்த உடலாகக் கருதிக் கொள்கிறான்.

அதாவது, ஒரு அறிவு தாவரத்தில் இருந்து, ஆறறிவு படைத்த பரிணாம வளர்ச்சியின் மூலம் மனிதனின் தனித்தன்மை அறிவு மேம்பட்டு விரிவுபடும் பொழுது, அவனது **பிரக்ஞை** என்ற உள்ளுணர்வு தனக்கென்று ஒரு தனித்துவமான அடையாளத்தை வெளிப்படுத்தி, தன்முனைப்பு அஹங்காரமாக மாறி, அதன் காரணமாக இவன் ஏற்றி வைத்துக் கொண்ட ஏராளமான எண்ண விருத்திகளின் விளை நிலமாக இந்த காரணசரீரம் இருப்பதினால், இவனது செயல் விளைவுகளின் ஒட்டு மொத்த சேமிப்புக் கலனான காரண சரீரமே "**சஞ்சித கர்மா**" என்றும் அழைக்கப்படுகிறது.

அதாவது, மனிதனிடம் உள்ள மூன்று கர்மாக்களில் **பிராரப்தம், ஆகாமியம்** மற்றும் **சஞ்சிதம்** என்பதில், அவனது பல்வேறு பிறவிகளின் ஒட்டுமொத்த எண்ணத் தொகுப்பாகிய காரண சரீரமே '**சஞ்சிதம்**' என்றும், தற்போதைய இந்த உடலின் வாயிலாக அவனை அறியாமலேயே அவனுக்கு அனுபவமாகும் அனைத்து செயல் விளைவுகளும் '**பிராரப்தம்**' என்றும், இதே உடலில் இவனது அறிவுக்கு உட்பட்டு, தற்போது இவனால் புதியதாக உண்டாக்கிக் கொள்கிற செயல் விளைவுகள '**ஆகாமியம்**' என்றும் கூறப்படுகிறது.

## காரண சரீரம்

ஆக, இதுப்போன்று ஒரு அறிவு புல், பூண்டு என தொடங்கி தற்போதைய ஆறறிவு மனித உடல் கிடைத்துள்ள பல்வேறு பிறப்புகளின் அனுபவங்கள் எல்லாம் ஒன்று சேர்க்கப்பட்டு, அந்த பரு உடலில் மனம் என்ற ஒன்றாக மாறி, அதில் தேங்கி நின்ற சித்தப் பதிவுகள் அவனது அடுத்த பிறப்புக்கு, காரணியாக அமைகிறது.

அதுவே சஞ்சிதம் என்ற '**காரண தேகம்**' ஆகும்.

அதாவது, மனிதனின் பரிணாம வளர்ச்சி இச்சரீரத்தில் பிரதிபலிக்கின்றது. இதனால், ஏனைய சரீரங்களான ஸ்தூல, சூக்கும சரீரங்கள் ஒவ்வொன்றாக அழிந்த பின்னரும், இந்த **காரண சரீரம்** மட்டும் பிறவிகள் தோறும் அப்படியே நிலைத்து நிற்கிறது.

ஒவ்வொரு பிறப்பிலும், இவனால் ஏற்றி வைத்துக் கொண்ட ஏராளமான எண்ணங்களால், இவனது மனம் பெறும் அனுபவங்கள், அந்த காரண சரீரத்தை மேலும், மேலும் விருத்தி அடையச் செய்கிறது.

அந்த காரண சரீரத்தை சாஸ்திரம் பஞ்சகோசங்களில் ஒன்றான "**ஆனந்தமய கோஷம்**" என்றும் கூறுகிறது.

அதாவது, ஆழ்ந்த உறக்கத்தில் தன்னை மறந்து ஆனந்தமாக தூங்கும்போது, ஏற்றி வைத்துக்கொண்ட எந்த எண்ணங்களும் இல்லாமல் மனமும், அந்த மனதினால் எழுந்த

செயல்களும் என ஏதுமில்லாமல், இந்த இரண்டு உடல்களும் ஒடுங்குகின்ற ஒரே இடம் **காரண சரீரம்** என்று கூறலாம்.

அதாவது, ஏனைய சரீரங்கள் மூலமாக நாம் பெற்ற அனுபவங்களை காரண சரீரம் ஒழுங்குபடுத்தி, அவைகளை நல்லது, கெட்டது எது எனப் பிரித்தெடுத்து தன்னிடம் சஞ்சித கர்மாவாக தக்க வைத்துக் கொள்கிறது. ஆக, அந்தக் காரண சரீரத்தின் சேகரிப்புகளைக் கொண்டே, அவனது மறுபிறப்பில் அவனுக்குரிய குணம், நாட்டம், திறமை என எல்லாம் நிர்ணயிக்கப்படுகின்றன.

எனவே, இந்தச் சரீரத்தில் பிரதிபலிக்கப்படும் காரணங்களைக் கொண்டு, அவனது எதிர்காலம் அமைக்கப் படுவதால்தான் இது "**காரண சரீரம்**" எனப்படுகிறது.

அந்த காரண சரீரத்திலேயே மனிதனின் கிரியாசக்தி அடங்கி இருக்கிறது.

பொதுவாக, மனிதனிடமுள்ள சத்துவகுணம் பொருந்திய உயர்மனம் தெய்வீகமானது. அந்த சத்துவ குணத்திலேயே மனிதன் தனது மனதைக் குவித்து ஒருநிலைப்படுத்தி தியானித்து, தனது சிந்தனையால் "**படைக்கும் ஆற்றலை**" (Creative Power) பெறலாம். அவ்வாற்றலின் மூலமாக, அவனது உயரிய சிந்தனைகள் அவனை அறியாமலேயே நல்ல செயல் வடிவங்கள் பெறுகின்றன.

## காரண சரீரம்

ஆனால், அவனிடம் காணப்படுகின்ற மற்ற குணங்களான ராஜஸம், தாமஸம் போன்ற குண பேதங்களால் அவன் ஆளப்படும் பொழுது, அவனது மனம் கீழ் நிலைக்கு இறங்கி, ஏற்றி வைத்துக் கொண்ட புற எண்ணங்களுக்கு ஏற்ப, இவனது செயலும் கீழ்த்தரமாக காணப்படுகிறது.

பொதுவாக, காரண சரீரத்தில் உதிக்கும் எண்ணங்கள் அரூபமானவை.

ஆனால், அவனது சூக்கும சரீரமான மனோசரீரத்தில் தோன்றும் சிந்தனைகள் ரூபமானவை. இதனால், சில சித்தபுருஷர்கள் தங்களது காரண சரீரத்தை விருத்தியடையச் செய்து, கடந்து போன பிறப்புக்களை ஞாபகத்துக்குக் கொண்டு வரவும் முடிகின்றது.

ஆக, அந்த காரண சரீரத்தின் மூலமாகத் தன்னை, வெளிப்படுத்திக் கொள்ளும் '**நான்**' என்ற தன்முனைப்பு கொண்ட தன்னுணர்வு ஒன்று உள்ளதை நமது சனாதன தர்மத்தில் தோன்றிய சாஸ்திரம் மட்டும்தான், அதை '**பிரஞ்ஞை**' என்று எடுத்துக் கூறுகின்றது. அத்தகைய ஒன்றேயான உணர்வை **பிரம்மம்** என்றும் உபதேசிக்கிறது.

இதைத்தான் சாஸ்திரத்தின் மகாவாக்கியம் "**பிரஞ்ஞானம் ப்ரம்மம்**" என்கின்றது.

## காரண சரீரம்

அதாவது, இருப்பது உணர்வு ஒன்று மட்டுமே என்பதினால், அந்த **உணர்வே இறைவன்** என்று கூறி, அந்த உணர்வே அனைத்து உடல்களுக்குள் உயிராக இருக்கிறது என்றும் கூறப்படுகிறது. அது எவ்வாறு என்பதை, சாஸ்திரம் எளிதாக விளங்க வைக்க முயற்சிக்கிறது.

ஆதியில் அனாதியான அந்த **சுத்தவெளி** ஒன்று மட்டுமே இருந்தது.

அந்த எல்லையற்ற வெட்ட வெளியானது **பெயர்** மற்றும் **உருவம்** இல்லாமல், நிர்குணமாய், சின்மாத்திரப் பரப்பிரம்மமாக மட்டுமே இருப்பு கொண்டிருந்தது.

அதாவது எவ்வாறு, இந்த பூமியில் சூரியனின் வெப்பச் சலனத்தால் கானல் நீர் தோன்றுகிறதோ?, அவ்வாறு, சுத்தவெளியாகிய **வெட்டவெளி** என்ற பரப்பிரம்மத்திடமிருந்து, இந்த மூலப்பிரக்ருதி என்ற “**மாயை**” முதன் முதலில் தோன்றியது என்கிறது.

இதில் மாயை என்பது, அந்த மகத்தான வெட்ட வெளியின் வெளிப்பாடு என்பதினால், அந்த மாயா மூலப் பிரக்ருதியிடமிருந்து **வெண்மை, சிவப்பு** மற்றும் **கறுப்பு** என மூன்று வர்ணங்களுடன் கூடிய மாயா சக்திகள் வெளிப்பட்டன.

அதில் முதலில் தோன்றிய வெண்மை நிறமான மாயா சக்தியிலிருந்து, **சிவப்பு, கருப்பு** என இரண்டு நிறங்களாக **அவித்யா சக்தியாகிய** அஞ்ஞானத்திலிருந்து **ஆவரணம்,**

**விக்ஷேபம்** என்ற இரண்டு மாயா சக்திகள் வெளிப்பட்டன என்றும், அதில், வெண்மை நிறமாகிய மாயா சக்தி சத்துவ குணத்தை பிரதானமாகக் கொண்டுள்ளதால், அதில் உண்டாகிய பிரதி பிம்பமே "**ஈஸ்வரன்**" என்ற இந்த மொத்த பிரபஞ்சம் என்றும் கூறப்படுகின்றது.

இந்த ஈஸ்வரனைத்தான் **ஆக்கல், காத்தல், அழித்தல்** என்ற முத்தொழில் புரிகின்ற நான்முக **பிரம்மா, விஷ்ணு** மற்றும் **ருத்ரன்** என்ற மூன்று தேவதைகளாக வழிபடுகின்றோம்.

ஆக, அந்த ஒன்றேயான பரப்பிரம்மத்திலிருந்து முதலில் தோன்றிய வெண்மை நிறமாகிய மாயையிலிருந்து **அவித்தையும்** (அஞ்ஞானம்), அவித்தையிலிருந்து அஹங்காரம் என்னும் **ஆவரண, விக்ஷேப சக்தியும்**, அதிலிருந்து **சப்தம் (ஒலி), ஸ்பரிசம் (உணர்ச்சி), ரூபம் (தோற்றம்), ரசம் (நீர்), கந்தம் (மணம்)** எனும் ஐந்து "**தன்மாத்திரைகளும்**" உண்டாயின என்கின்றது.

அந்த தன்மாத்திரைகள் வாயிலாக, சூட்சுமமாக (கண்ணிற்குத்தெரியாத) **மண், நீர், நெருப்பு, காற்று** மற்றும் **ஆகாயம்** என்ற பஞ்சபூதங்கள் தோன்றின.

அவைகளைக் கொண்டு உயிருள்ள, உயிரற்ற சகல வஸ்துக்களும், அவற்றின் ஆதார மூலக்கூறான அணுவையும், அணுவின் உட்கூறுகளையும் இன்றைய நவீன அறிவியலான உயிரியலும், வேதியியலும் எல்லாமே இந்த பஞ்சபூதங்களின்

அடிப்படையில் உண்டானவைகளே என்பதையும் ஏற்றுக் கொள்கின்றன.

அதேசமயம், இந்த அறிவியல் ஆய்வுகளுக்கு முன்னதாகவே, அன்றைய நம்முடைய சனாதன தர்மத்தின் வழி வந்த பண்டைய ரிஷிகள் இந்த பிரபஞ்சம் முழுவதும் **ஆகாயம், காற்று, நெருப்பு, நீர்** மற்றும் **நிலம்** ஆகிய ஐந்து பூதங்களால் உண்டானவைகள் என்றும், அவைகளைப் பற்றிய அரிய உண்மைகளை தத்துவங்களாக நமக்கு விளக்கியும் உபதேசித்து அருளியுள்ளனர்.

ஆக, இவ்வைந்தும் அனைத்திற்கும் ஆதாரத் தத்துவங்கள் என்னும் பொருள்பட "**பஞ்சபூதங்கள்**" என்று அழைக்கப்படுகின்றன. இதிலே, **ஆகாசம், ஆகாயம்** அல்லது **வெளி** எனப்படுவது முதற்கூறு.

இதில், நாம் காணும் **வானம்** என்ற ஆகாயமும் அடங்கும் என்றாலும், இந்த பிரபஞ்சம் முழுதும் பரவியிருக்கும் வெட்ட வெளியையே இங்கு ஆகாசத் தத்துவமாகக் குறிப்பிடப்படுகிறது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அந்த ஒன்றேயான வெட்டவெளி என்ற ஆகாச தத்துவத்தில் இருந்து, வெளிப்பட்ட மாயா சக்தியின் மூலம் உண்டான இந்த பஞ்ச பூதங்களும் கண்களுக்குப் புலப்படாத நுட்பமான நுண்ணிய பூதங்களாகவே முதன் முதலில் உண்டாயின.

## <u>ஐந்து பூதங்களால் உடல் உண்டாதல்</u>

அந்த சூக்கும பஞ்ச பூதங்களில் இருந்துதான் தற்போது நாம் கையாளும் தூல **மண், நீர், நெருப்பு, காற்று** மற்றும் **ஆகாயம்** என்ற ஐந்து பூதங்களும் உண்டாகி, பூதங்கள் ஐந்தில் ஒவ்வொரு பூதத்திலிருந்து இரண்டு பூதங்களாகப் பிரிந்துக் கொண்டன.

அவ்வாறி இரண்டாகப் பிரிந்த இரண்டு விதமான பஞ்ச பூதங்களில் ஒன்றான ஐந்து பூதங்களும் சேர்ந்து ஒன்றேயான **சமஸ்டி** என்றும், மற்ற ஐந்து பூதங்களும் தனித்தனியாக இருந்துக் கொண்டு **வியஸ்டி** என்றும் அழைக்கப்பட்டன.

அதாவது, **சமஸ்டி** என்றால் ஐந்து பூதங்களும் ஒன்றாகக் கலந்த ஒரு ஒட்டு மொத்தத் தொகுப்பு. **வியஸ்டி** என்றால், ஐந்து பூதங்களும் தனித்தனியாக உள்ளன என்றும் அறிந்துக் கொள்ள வேண்டும்.

இதில், ஐந்து பூதங்களும் ஒன்றேயான சமஸ்டி பஞ்சபூதங்கள் மூலம் இந்த "**பிரபஞ்சம்**" உண்டாயிற்று. இந்த பிரபஞ்சத்தைத்தான் **மாயை** அல்லது **ஈஸ்வரன்** என்று சாஸ்திரம் அழைக்கிறது.

இரண்டாவதாக பிரிந்த தனித்தனியான ஐந்துபூதங்களும் வியஸ்டி என்பதினால், அவைகள் தனித்தனி உடல்கள் உண்டாவதற்குக் காரணமான "**இருபத்து நான்கு தத்துவங்களாக**" ஆயிற்று.

அவைகள் ஐந்து பூதங்கள், ஐந்து ஞானேந்திரியங்கள், ஐந்து கர்மேந்திரியங்கள், ஐந்து தன்மாத்திரைகள், நான்கு அந்தக்கரணங்கள் என 24 தத்துவங்கள் உண்டாயின.

இதுபோல, பஞ்சபூதங்களையும் சமஸ்டி, வியஸ்டி பாகங்களாகச் செய்து ஒரு பூதத்துடன் மற்றொரு பூதம் சேர்ந்தபோது உயிரினங்களுக்கு உடல் உண்டாயிற்று.

பஞ்சபூதங்கள், ஸ்தூலமான நிலையடைந்து நம்முடைய ஸ்தூல உடலுக்கு ஆதாரமாகின்றன எனலாம். அதாவது நம் உடல் **பஞ்சீகரணம்** செய்யப்பட்ட பஞ்ச பூதங்களால் ஆனதே ஆகும்.

அதாவது, பஞ்சபூதங்கள் கண்களுக்குப் புலப்படாத நுட்ப நிலையிலிருந்து மாற்றப்பட்டு, ஸ்தூல நிலையை அடைவதே '**பஞ்சீகரணம்**' என்று கூறப்படுகிறது.

*[இந்தப் பஞ்சீகரணம் பற்றி விரிவாகத் "***தன்னை அறியும் தத்துவங்கள்***" என்ற நூலிலே ஏற்கனவே விளக்கப்பட்டுள்ளது.]*

அவ்வாறு, ஸ்தூல பஞ்சபூதங்களால், நம்முடைய இந்த ஸ்தூல உடல் உண்டாவதற்குக் காரணமாக **காரண உடல்** என்ற **காரண சரீரம்** அல்லது **காரண தேகம்** என்ற ஒன்று உள்ளது.

பொதுவாக, நம் ஒவ்வொவருக்கும் **மூன்று உடல்கள்** உள்ளன.

அவைகளை, நாம் காணும் நம்முடைய பரு உடலாகிய ஸ்தூல உடல், மற்றும் இந்த ஸ்தூல உடலுக்கு உதவியாக உள்ள கண்களுக்குப் புலப்படாத சூக்கும உடல், அத்துடன், நம்முடைய ஸ்தூல, சூக்கும உடலுக்கு காரணமான **காரண உடல்** என்றும் அறியப்பட வேண்டும்.

ஆக, இந்த ஸ்தூல, சூக்கும உடல்கள் உண்டாவதற்குக் காரணமாக எது உள்ளதோ, அதுவே, **காரண உடல்** என்று அழைக்கப்படுகிறது.

ஆனால், நம்முடைய இந்த ஸ்தூல உடல் பிறந்து, பிறந்து இறப்பதற்கு காரணமான காரண உடலைக் கண்டறிந்தோமானால், அந்த காரண உடலுக்கு காரணம் என்ன? என்பதுவும் நமக்கு விளங்க வரும்.

அதே சமயம், அவ்வளவு எளிதாக அந்த காரண உடலைக் கடக்க முடியாதவாறு **ஐந்து கோஷங்கள்** அவைகளை மறைத்துக் கொண்டுள்ளன. ஆக, நாம் அந்த ஐந்து கோசங்களை கடந்து காரண உடலுக்கு காரணம் என்ன? என்பதையும் கண்டறிய வேண்டும்.

அத்துடன், இந்த ஸ்தூல உடல் உண்டாவதற்கான உண்மைக் காரணம் என்ன? என்பதையும் எளிதாக அறிந்துக்கொண்டால், ஏற்றி வைக்கப்பட்ட ஏராளமான எண்ணங்களின் வித்தாகிய மூல விதையாகிய இந்த **காரண தேகம்** என்ற சஞ்சித கர்மாவைக் கடந்த, அந்த ஒன்றேயான அகண்ட ஆன்மாவை அறிந்துக் கொள்ள முடியும்.

## காரண சரீரம்

ஆக, அந்த ஆன்மாவை அறிய ஐந்து கோஷங்கள் நமக்குத் தடையாக உள்ளன.

அவைகள், **அன்னமய கோஷம், பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம்,** மற்றும் **ஆனந்தமய கோசம்** என்பனவாகும்.

ஐந்து கோசங்களில் முதலில் கூறப்பட்ட அன்னமய கோசமாக விளங்கும் பருவுடலே **ஸ்தூல சரீரம்**. அடுத்து உள்ள பிராணமய கோசம், மனோமய கோசம், மற்றும் விஞ்ஞானமய கோசங்களின் தொகுப்பே **சூக்கும சரீரம்**. இந்த இரண்டிற்கும் காரணமாக விளங்குவதே '**காரண சரீரம்**' எனப்படும்.

நமது உடலுக்குள்ளே உயிர் இருக்கிறது.

இந்த உயிரைச் சுற்றியே ஐந்து உறைகளாக அதை மூடிக் கொண்ருக்கின்ற உடம்புகளை 1. ஸ்தூல சரீரம் 2. சூக்கும சரீரம் 3. குண சரீரம் 4. கஞ்சுக சரீரம் 5. காரண சரீரம் என்று கூறப்படுகிறது.

இவைகளில், ஸ்தூல சரீரத்தை **அன்னமயகோசம்** என்றும், சூக்கும சரீரத்தை **பிராணமய கோசம்** என்றும், குண சரீரத்தை **மனோமயகோசம்** என்றும், கஞ்சுக சரீரத்தை **விஞ்ஞானமய கோசம்** என்றும் சொல்வதுண்டு.

அடுத்து, இவைகள் எல்லாம் உண்டாவதற்குக் காரணமான காரண சரீரத்தை **ஆனந்தமய கோசம்** என்று

கூறப்படுகிறது. அந்த ஆனந்தமய கோசமாகிய காரண சரீரத்தைப் பற்றித்தான் இங்கு நாம் காண இருக்கிறோம்.

இதிலே, கோசம் என்றால் உறை என்று பொருள்.

## அன்னமய கோசம்:

நம் கண்களுக்குத் தெரிகிற உடம்பைத் ஸ்தூல சரீரம் அல்லது **அன்னமய கோசம்** என்பர்.

இந்த உடம்பு உணவினால் கட்டப்பட்ட வீடு.

அதாவது, தோல், மாமிசம், இரத்தம், எலும்பு ஆகியவற்றின் ஒட்டு மொத்த தொகுப்பு இது! இந்த கண்களுக்குத் தெரிகின்ற ஸ்தூல சரீரம் என்பது பூதவுடலைக் குறிக்கும்.

‘**ஸ்தூல**’ என்றால் **அறியக் கூடியது** என்று அர்த்தம். ‘**சரீரம்**’ என்றால் **தொடர்ந்து அழிந்து கொண்டிருப்பது** என்று அர்த்தம்.

அதாவது, தொடர்ந்து அழிந்துக் கொண்டிருக்கும் இந்த ஸ்தூல சரீரத்தை **அறியக்கூடிய அழிவு** என்று பொருள் கொள்ளலாம்.

ஆக, இந்த பூதவுடல் முற்றிலும் அழியும்போது, அதற்கு **மரணம்** ஏற்படுகிறது.

பூமியில் விதைக்கப்படும் விதைபோல, இந்தப் பூத உடலின் விதை, தாயின் கருவறையிலேயே விதைக்கப்படுகிறது. எப்படி மிகச் சிறிய விதையில் ஒரு மிகப் பெரிய ஆலமரம் ஒடுங்கி இருக்கிறதோ, அவ்வாறு, மிகச் சிறிய விந்தணுவில் மனிதனின் மிகப்பெரிய ஸ்தூல உடல் அடங்கியிருக்கிறது.

எவ்வாறு, இளஞ் செடியானது, சிறிது, சிறிதாக வளர்ந்து மரமாகிப் பூத்து, காய்த்து, கனிகளைத் தந்துவிட்டு, அந்தப் பழத்தில் உள்ள விதைகள் மூலம் மீண்டும் தன் மூலத்திற்கு திரும்பி, அதனால், மீண்டும் தன் சந்ததியை வளர்த்துக் கொள்கிறதோ? அதுப்போல, மனிதனும், விந்தணுவின் மூலம் உண்டான இந்த ஸ்தூல சரீரத்தைக் கொண்டு, தன் மூலமான விந்தணுவில் இருந்தே, தன்னுடைய சந்ததியை வளர்த்துக் கொள்கிறான்.

மேலும், தாவரங்களிலே ஒரு பிரமாண்டமான ஆலமரம் ஒரு நாள் தன் ஸ்தூல உடலை உதறிவிட்டு, இந்த மண்ணுடன், மண்ணாக மீண்டும் மக்கிப்போய், தனக்கு கொடுக்கப்பட்ட பஞ்சபூதங்களில் மீண்டும் கலந்து விடுகிறதோ?, அவ்வாறே, மனிதனும் தனது ஸ்தூல உடலை ஒரு நாள் உதறிவிட்டு, இந்த மண்ணுடன் மண்ணாக மக்கி, பஞ்சபூதங்களில் மீண்டும் கலந்து விடுகிறான்.

அதாவது, அவைகள் **இயற்கை எய்துகின்றன.** மனிதனும் இயற்கையை அடைகிறான்.

இதிலே, மரத்துக்கும், மனிதனுக்கும் உள்ள வேறுபாடு என்னவெனில், ஒரு மரத்துக்கு '**நான்**' என்ற தன்னுணர்வு இன்னும் உண்டாகவில்லை. அது அறிவுப் பரிமாணத்தில் படிப்படியாக மனிதனின் ஆறாவது அறிவுப் பரிமாணத்தில் நுழையுபோது மட்டும்தான், அது, "நான் இருக்கிறேன்" என்ற தன்னுணர்வை அறியமுடியும். அதுவரை அதற்கு தான் இருப்பதை அறிந்துக் கொள்ள முடியாது.

ஆனால், மனிதனிடம் தோன்றும் அந்த '**நான்**' என்ற தன்னுணர்வு அவனது தனித்த உடலின் அபிமானம் காரணமாக "நான் இருக்கிறேன்", "நான் செய்கின்றேன்" என்ற, ஏற்றி வைத்துக் கொண்ட எண்ணங்களின் அடிப்படையில் உண்டான புத்தி சக்தியின் மூலம், அஹங்காரமாக மாறி, அவனது அடுத்த பிறவிக்கான உடலுக்கு வித்திடுகின்றன.

எனவே, இந்த ஸ்தூல சரீரம் என்பது, எல்லையற்ற இந்த இயற்கை அம்சங்களான பஞ்சபூதங்களில் இருந்து தோன்றியதுதான் எனும்போது, எவராலும் அல்லது எதனாலும் அதை ஆக்கவோ, அழிக்கவோ முடியாது. ஆனால், அவைகளை மாற்றத்திற்கு மட்டுமே உட்படுத்த முடியும். அதாவது, ஒரு ஆற்றல், வேறு ஒரு ஆற்றலாக மாறுகின்றது.

எனவே, அவ்வாறு, தோன்றி, மறையும் இந்த உடல்கள் வந்து போவதால், இதை '**மித்யா**' என்று சாஸ்திரம் கூறுகிறது. அதாவது, '**மித்யா**' என்றால், இல்லாத ஒன்று, இருப்பதின்மீது ஏற்றி வைக்கப்பட்டுள்ளது என்று பொருள்.

ஆக, உண்மையில் இந்த பரு உடலுக்கு என்று எந்தவித, தனித்துவமான **மனம், குணம், திடம்** என்று எதுவுமே கிடையாது. அதுப்போன்று, அந்த உடலுக்கு என அறிவும் கிடையாது. ஆனால், அவைகள் எல்லாம், அந்த அறிவின் வெளிப்பாடு என்பதை அறியாமல், பலரும் இந்த உடலையே "**நான்**" என்று அறியாமையால் அபிமானித்துக் கொண்டு, அதன்மீது பற்று வைத்துக் கொள்கின்றனர்.

ஆக, அவர்களுக்கு இந்த "**நான்**" என்ற தனித்துவமான உடல்மீது அபிமானம் கொண்ட அடையாளம் இருக்கும்வரை, அவர்கள் தங்கள் உண்மை சொரூபமாகிய அறிவை (ஆன்மா) அல்லது உணர்வை உணர முடியாமல் போகின்றது.

எனவே, எப்பொழுது, இந்த "**நான், நான்**" என்ற உணர்வு இந்த உடலுக்கு ஆதாரமான உயிரிடம் இருந்துதான் உண்டாகிறது என்பதை, தன்னுடைய பகுத்தறியக்கூடிய புத்தி சக்தியைப் பயன்படுத்தி, எவரொருவர் எளிதாகக் கண்டு கொள்கிறாரோ?, அவரே, '**என் செயலாவது எதுவுமில்லை, எல்லாம் அவன் செயலே!**' என்றும் அப்படியே, '**உள்ளது உள்ளபடி**' ஏற்றுக் கொள்கிறார்கள்.

இதைப் புரியாத பலரும் பலவிதமான பயிற்சிகளை பயின்றுக் கொண்டு, இந்த உடலை வளர்த்துக்கொள்ள பலரையும் நாடி இங்கும், அங்கும் அலைந்து, திரிந்துக் கொண்டுள்ளனர்.

ஆனால், அவர்கள் இந்த உடல் வளர வேண்டுமானால், அதற்கு அதாரமான **உயிர்** இருந்தாக வேண்டும் என்ற உண்மையை உணராமல், அதாவது, **உயிரை வளர்க்கும் உபாயம்** தெரியாமல் உள்ளனர். இதைத்தான் அறியாமை என்று சாஸ்திரம் அறிவுறுத்துகிறது.

## பிராணமய கோசம்:

**வாக்கு, கைகள், கால்கள், எருவாய், கருவாய்** என்ற ஐந்த தொழிற்கருவிகளுடன் பிணைக்கப்பட்ட காற்று மயமான உடம்பு **பிராணமய கோசம்** எனப்படும்.

இது காற்றால் அமைந்த உருவம். இது போவதும், வருவதுமாய் இருப்பது. காற்றைப்போல உள்ளும், புறமுமாய் இருப்பது, இந்தக் காற்றுடம்பை ஆட்டி வைப்பது **மனம்** என்பதினால், பலரும் அந்த மனதை அடக்க பலவிதமான மூச்சுப் பயிற்சிகளை மேற்கொள்கின்றனர்.

## மனோமய கோசம்:

ஐம்புலன்களுடன் மனம் என்ற மேலும் ஒரு கருவியுடன் கூடிய உடம்பு **மனோமய கோசம்** எனப்படுகின்றது.

எண்ணங்களை உற்பத்தி செய்வது இந்த மனம் என்ற சூக்குமு உடம்பே! ஆகும்.

உலகப் பொருள்களில் ஆசையைத் தூண்டி, பல்வேறு பாவ, புண்ணியங்களைச் செய்ய வைத்து, மீண்டும் உடல் எடுத்து பிறவியில் வந்து விழுவதற்குக் காரணம் இந்த மனமாகிய உடம்பே ஆகும்.

ஆக, இந்த மனம் என்பது என்ன? என்று அறிந்தால், ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்களால் எழுந்த அஹங்காரம் அழியும். எனவே, பிறவிக்குக் காரணமாயும், பிறவியிலிருந்து விடுபடக் காரணமாயும், இருப்பது இந்த மனமே என்பதினால், இந்த மனம் **இராஜசம், தாமசம்** என்ற குணங்களால் அழுக்கடைகின்றது.

அதுவே, சத்துவ குணத்தால் தூய்மை அடைந்து, தன்னை அறியக்கூடிய புத்தி சக்தியாகவும் பரிணமிக்கிறது.

இந்த மனம் என்ற சூக்கும சரீரம் என்ற கண்களுக்குப் புலப்படாத நுண் உடல் இருக்கும் போதுதான், நாம் தொட்டுப்பார்த்து அறியக்கூடிய நம்முடைய இந்த பூத உடல் என்ற ஸ்தூல உடல் இயங்குகிறது.

அதுவே, அந்த சூக்கும உடல் இல்லாதபோது, இந்த பரு உடலாகிய ஸ்தூல உடல் இயங்குவதில்லை. மேலும், இந்த ஸ்தூல உடலைத் தொட்டுப்பார்த்து அறிவதுப்போன்று, சூக்கும உடலைத் தொட்டுப் பார்த்தோ?, கண்களால் கண்டோ? அறிய முடியாது. ஆனால், அதன் இருப்பை உணர முடியும். அதை நம் அனுபவத்தில் அறியமுடியும்.

அது எப்படி? என்றால், மற்றவர்கள் நம்மீது காட்டும் அன்பையோ, வெறுப்பையோ நாம் கண்களால் அல்லது காதுகள் போன்ற மற்ற புலன்களால் அறிய முடியாது. ஆனால், அந்த அன்பை அல்லது வெறுப்பை நாம் உணரலாம்.

அவ்வாறே, நம்மிடம் உண்டாகும் எண்ணங்களும் சூட்சுமமாகவே இருக்கின்றன.

மேலும், இந்த எண்ணங்கள் நம்மிடம் உள்ள ஐம்புலன்களால் அறியப்படுவதில்லை.

ஆனால், நாம் நம்மிடம் உள்ள உணர்வின் வாயிலாக, அந்த எண்ணங்களை உணர்ச்சிகளாக மாற்றி, உடல் வாயிலாக அனுபவமாக்குகிறோம். ஆனால், அந்த உடலில் உள்ள ஐம்புலன்களைக் கொண்டு, அந்த சூக்கும எண்ணங்களை அறிய முடியாது.

எனவே, எல்லாமாக இருக்கின்ற நம் உண்மை இயல்பாகிய இருப்பு அல்லது உயிர் என்ற உணர்வின் மூலம் மட்டுமே நாம் எல்லாவற்றையும் அறிகிறோம்.

ஆக, அந்த உணர்வைத்தான் சாஸ்திரம் “**பிரஞ்ஞை**” என்று அழைக்கிறது. அந்த பிரஞ்ஞையைத்தான் “**ப்ரம்மம்**” அல்லது “**இறைவன்**” என்றும் அழைக்கிறது.

அதாவது, “**பிரஞ்ஞானம் பிரம்மம்**” என்பது சாஸ்திரத்தின் மகாவாக்கிய உபதேசம் ஆகும்.

ஆக அந்த பேருணர்வு அல்லது பேரறிவாகிய சைதன்யத்தின் உதவியால் மட்டுமே நாம் நம்மிடம் உள்ள புலன்களைக் கொண்டு அனைத்தையும் அறிகிறோம்.

எவ்வளவு காலம் இந்த கண்களுக்குப் புலப்படாத சூக்கும சரீரம் மற்றும் கண்களுக்குத் தெரிகின்ற ஸ்தூல சரீரம் இருக்கிறதோ, அவ்வளவு காலம் அந்த உணர்வு இந்த ஸ்தூல உடல் மூலம் உணர்ச்சிகளாக உணரப்பட்டு அறியப்படுகிறது.

அதிலே, நம் கண்களுக்குப் புலப்படாத சூக்கும சரீரம் நீங்கிய பிறகு, ஸ்தூல சரீரம் எந்த வினையும் புரிவதில்லை.

அதனால், அம்மனிதர் இறந்து விட்டார் என்கிறோம். இங்கு இறப்பு என்பது, ஸ்தூல சரீரத்திலிருந்து சூட்சும சரீரம் நீங்குவதேயாகும்.

ஸ்தூல சரீரம் ஐந்துபூதங்களால் ஆனது.

அதுபோன்று, ஸ்தூல நிலையை அடையாத, அதி நுட்ப நிலையில் உள்ள சூக்கும சரீரமும் ஐந்து பூதங்களால் ஆனதுதான்.

அதாவது, **பஞ்சீகரணம்** என்ற மாற்றம் ஏற்படாத நிலையில் பஞ்சபூதங்கள் இருக்கும் முந்தைய நிலையைத்தான் **சூக்குமம்** என்றும் கூறுகிறோம்.

இந்த சூக்கும சரீரம் பதினேழு தத்துவங்களைக் தன்னகத்தே கொண்டது. அதாவது, சூக்கும சரீரம் பதினேழு அங்கங்களைக் கொண்டது.

அவைகள், பஞ்ச ஞானேந்திரியங்கள் **(கண்கள், காதுகள், மூக்கு, நாக்கு, தோல்)** இவைகள் ஐம்புலன்கள் அல்லது ஐந்து உணரும் கரணங்கள் எனலாம். அடுத்து, பஞ்ச கர்மேந்திரியங்கள் அதாவது, **வாய், கைகள், கால்கள், கருவாய்** (ஆண்/பெண் குறிகள்) மற்றும் **எருவாய்** (மல/ஜலத் துவாரங்கள்) ஆகிய ஐந்தும் செயலாற்றுவதால், ஆவைகளை செயற்கருவிகள் என்று அழைக்கப்படுகின்றன.

ஆக, ஐந்து ஞானேந்திரியங்கள், ஐந்து செயற் கரணங்கள், ஐந்து பிராணன்கள், அத்துடன் மனம், புத்தி ஆகிய 17 அங்கங்கள் சேர்ந்ததுதான் சூட்சுமச் சரீரம் எனப்படுகிறது.

இங்கு ஐம்புலன்கள் எனக் குறிப்பிடப்படுவன நாம் இந்த கண்களால் காணுகின்ற நம்மிடம் உள்ள தூல புலன்கள் அல்ல.

கண்களும், காதுகளும் உருவத்தில் உள்ளன என்றாலும், கண்கள் பார்க்க வேண்டும். காதுகள் கேட்க வேண்டும் என்ற கட்டாயம் அந்த உறுப்புகளுக்கு இல்லை. ஏன்? என்றால் கண்கள் காணும் ஆற்றல் என்பது சூக்குமமானது. அதாவது, மிகவும் நுட்பமானது.

அவ்வாறே கேட்கும் சக்தியும் சூக்குமமானது. எனவே, ஸ்தூலமான உறுப்புகள் பழுதடைந்தால், சூக்குமமான அந்த புலன்களுக்கான சக்தி வெளிப்படாமல் போகிறது.

அவ்வாறே, சூக்குமமான புலன்களின் சக்தி வெளிப்பட ஏதுவான புறப்புலன்கள் குறைபாடு கொண்டவைகளாக இருந்தால், அதாவது, அந்த ஸ்தூல கண்கள், காதுகள் சரியாக வளர்ச்சி அடையாத நிலையில் இருந்தாலும் அவைகளும் பயன்படாது.

எவ்வாறு மின்சார விளக்கு பழுதடைந்தால், அங்கு மின்சாரம் இருந்தாலும், ஒளியைத் தராதோ, அவ்வாறே ஐம்புலன்கள் என்னும் ஸ்தூல உறுப்புகள் பழுதடைந்தாலும், சூக்கும சரீரத்தின் வெளிப்பாட்டை உணர்த்தும் சக்திகள் இருந்தும், அந்த புறப்புலன்களால் பயன் ஒன்றுமில்லை.

ஆக, அந்த ஐம்புலன்களும், ஸ்தூல சரீரத்துக்கு வெளி உலகத்தை வெளிப்படுத்தும் ஜன்னல்களாக விளங்குகின்றன. எனவே, இந்த ஐம்புலன்கள் என்னும் ஜன்னல்கள் வழியாகத் தான் வெளி உலகை நம்முள் ஈர்த்துக்கொள்ள முடிகிறது என்பதை என்றுமே மறந்துவிடக்கூடாது.

எனவே, ஏற்றி வைக்கப்பட்ட ஏராளமான எண்ணங்கள் விஷய, சுகங்களில் வெளிப்படுவதும், புலன்களினால் உள்வாங்கப்படுவதும் குணங்களின் தொழில் என்பதால், 'குணங்களே குணங்களில் ப்ரவ்ருத்திக்கின்றன' என்பதைத்தான் பகவான் ஶ்ரீகிருஷ்ணர் தமது பகவத் கீதையில் '**குணா குணேஷு வர்தந்தே**' என்கிறார்.

ஆக, **'மனம்போல் வாழ்வு'**, **'எண்ணம் போன்று வாழ்வு'** என்ற பழமொழிகளையும் இங்கு நினைவில் கொள்ள வேண்டும்.

## விஞ்ஞானமய கோசம்:

ஐம்புலன்களுடன் புத்தி என்ற கருவியும் கூடியது **விஞ்ஞானமய கோசம்.** ஒரு பொருளை அறிவதும், செயல் புரிவதும், அத்துடன் இவைகளுக்கெல்லாம் **'நான்தான் கர்த்தா'** என்று சொல்லிக் கொள்வதும் இந்த விஞ்ஞானமய கோசம் என்ற உடம்பே ஆகும்.

**ஆனந்தமய கோசம்:**

பரமாத்மாவின் பிரதி பிம்பமாய் இருப்பது **ஆனந்தமய கோசம்** ஆகும்.

தனக்குச் சுகம் கிடைக்கும்போதும் ஆழ்ந்த உறக்கத்தில் சலனமற்றுத் தூங்கும் போதும், அனைத்துப் புலன்களும் அடங்கிய நிலையில் பேரானந்த நிலை ஒன்று உள்ளது அல்லவா?

அந்த ஆனந்தத்தை அனுபவிப்பது **ஆனந்தமய கோசமே** ஆகும்.

யோகிகளும், ஞானிகளும் எப்போதும் தியானத்தில் தன்னை மறந்த லயத்தில் இருப்பார்கள். அவர்களின் மற்ற உடம்புகள் எல்லாம் அடங்கிய நிலையில் இந்த ஆனந்த மய கோசம் என்ற உடம்போடுதான் இருப்பார்கள்.

ஆனால், நாமோ தூல சரீரத்துடன் கூடிய விழிப்பு நிலையிலும், சூக்கும சரீரத்துடன் இருக்கும் கனவு நிலையிலும் நம்மைப் பற்றி நாம் உண்மையில் அறிவதில்லை.

அதுப்போல, நமக்கு ஏற்றி வைக்கப்பட்ட புறப் பொருட்களைப் பற்றிய விஷய ஞானம் இருந்தபோதிலும் ‘**ஆத்ம ஞானம்**’ இல்லை.

## காரண சரீரம்

அவ்வாறே, ஆழ்ந்த உறக்க நிலையில் நம் மனம் அந்த காரணச் சரீரத்துடன் ஒடுங்கி விடுவதினால், அந்த காரணச் சரீரத்துடன் கூடி இருக்கையில் நம்மைப் பற்றியும் நம்மைச் சுற்றியுள்ள உலகைப் பற்றியும் நமக்கு எதுவும் தெரிவதில்லை.

காரணம் அங்கு அதை அறிவதற்கான **மனம்** இல்லை.

"நடந்தது எதுவும் எனக்குத் தெரியாது, என்னையே நான் அறியவில்லை" என்று கூறும்போதெல்லாம், அந்த அனுபவத்தை **ஆழ்ந்த உறக்க நிலை** என அழைக்கலாம்.

மூன்று நிலைகளை அல்லது மூன்று வித அனுபவக் களங்களை அனுபவிக்க, **மூன்று வித உடல்கள்** உள்ளன.

ஸ்தூலச் சரீரம் விழிப்பு நிலையிலும் **(ஜாக்ரதம்),** சூக்குமச் சரீரம் கனவு நிலையிலும் **(ஸ்வப்னம்),** காரணச் சரீரம் ஆழ்ந்த உறக்கத்திலும் **(ஸுஷுப்தி)** பொருந்துகிறது.

இதிலே, நாம் சூக்கும சரீரத்தைப் பற்றிக்கொண்டால் கனவுலகில் நுழைகிறோம். அதுவே, ஆழ்ந்த உறக்கம் வரும் போது, ஸ்தூல - சூட்சும சரீரங்களை ஒதுக்கிவிட்டுக் காரணச் சரீரத்துடன் இருக்கிறோம்.

நம்மைச் சுற்றியுள்ள எதுவும் நமக்குப் புலப்படாத நிலையில் நம்மையே அறியாத நிலையில், ஆழ்ந்த

உறக்கத்தின் அறியாமை ஒன்றே நமது அனுபவத்துக்கு உள்ளது.

அதேசமயம், விழிப்பு நிலையில் நாம் இந்த ஸ்தூல சரீரத்தைப் பற்றிக் கொண்டிருக்கும்போது கனவு காண்பதோ, உறங்குவதோ இல்லை. இந்த ஸ்தூல சரீரத்தின் துணையால் விழிப்பு நிலையில் போகப்பொருட்கள் நிறைந்த இவ்வுலகை நாம் அனுபவிக்கிறோம்.

அவ்வாறே, சூக்கும சரீரத்தின் உதவியால் கனவை அரங்கேற்றி அதையும் அனுபவித்துக் கொள்கிறோம்.

அதுவே, காரண சரீரத்துடன் இருக்கையில் அங்கு எதையும் நாம் காண்பதோ, தோற்றுவிப்பதோ கிடையாது. ஆனால், அங்கு அறியாமையுடன் கூடிய '**ஆனந்தம்**' மட்டுமே அனுபவமாகிறது.

ஆகவே, உறங்கும்போது, உடலுக்கும், மனதுக்கும் இருப்பு இல்லாதபோது, நாம் சார்ந்திருப்பது, நம்மை சம்பந்தப்படுத்திக் கொள்வது, தொடர்புபடுத்திக் கொள்வது அனைத்தும் காரண சரீரத்துடனேயே ஆகும்.

ஆக, இதுவே அறியாமைகளின் மொத்த தொகுப்பு எனலாம்.

## காரண சரீரம்

அதேசமயம், நாம் நம்முடைய ஸ்தூல சரீரத்தால் படைக்கப்படும், அனுபவிக்கப்படும் எந்த விஷயத்துடனும், நம்மை நாம் சம்பந்தப்படுத்திக் கொள்வதில்லை.

அதாவது, விழிப்பு நிலையில், நனவுலகின் எந்தப் பொருளோடும், நிகழ்வோடும் நாம் சம்பந்தப்படுவதில்லை.

அதுப்போன்று, சூக்கும சரீரத்தால் உறக்க நிலையில், படைக்கப்படும், அனுபவிக்கப்படும் எந்த விஷயத்துடனும், நம்மை நாம் சம்பந்தப்படுத்திக் கொள்வதில்லை. அதாவது, கனவுலகின் எந்தப் பொருளோடும், நிகழ்வோடும் நாம் சம்பந்தப்படுவதில்லை.

ஆக, அங்கு 'நான்' அங்கு தோன்றுவதில்லை.

உண்மையில், இந்த '**நான்**' எங்கிருந்து அல்லது எதிலிருந்து தோன்றுகிறது? என்பதை சற்று ஆழமாக ஆராய்ந்து பார்த்தால், அந்த “**நான்**” என்ற உணர்வும் அந்த காரண சரீரத்திடமிருந்தே உண்டாகிறது.

ஆனால், இதிலிருந்து வெளிப்படுகின்ற “**நான்**” தனித்து வமான தன்னுடைய ‘**நான்**’ என்று மனம் நினைத்துக் கொள்வதால், அது, **மனம், புத்தி, சித்தம்** மற்றும் **அஹங்காரம்** என்ற அடுத்தடுத்த பரிமாணத்தில் சிக்கிக் கொள்கிறது.

இந்த சிக்கலின் காரணமாக, ஈஸ்வரனின் காரணத் தேகத்தை, தனித்த தன்னுடைய தேகமாகக் கருதிக்கொள்கிறது. ஆனால், உண்மையில் **காரணத் தேகம்** என்ற ஒன்று, பிரபஞ்ச மனமாகிய "**ஈஸ்வரன்**" என்பதினால், அதை '**மாயை**' என்றே சாஸ்திரம் அழைக்கிறது.

அதாவது, '**மா**' என்றால் **ஒடுங்குதல்** என்றும், '**யா**' என்றால் **விரிதல்** என்றும் பொருள்.

ஆக, இந்த மனம் விரிந்து உலகம் தோன்றுவதற்கும், ஒடுங்கி உலகம் மறைவதற்கும் இந்த **காரண சரீரம்** என்ற மாயையே காரணம் ஆகும்.

பொதுவாக, மாயை எனும்போது, இந்த உலகம் தன்னிலிருந்து தோன்றுவதற்கும், பிறகு தன்னில் வந்து ஒடுங்கு வதற்கும் அடிப்படைத் தத்துவம் ஆகும். அதாவது, இல்லாததை இருப்பதாகக்காட்டி, மனதை மயக்குவது "**மாயை**" எனலாம்.

அப்படிப்பட்ட இந்த காரண சரீரத்தை நிலையானதா?, நிலையற்றதா? என அறிய முடியாததாக இருப்பதினாலும், அதில் புதைந்துள்ள அறியாமைகள் வெளிப்படாத நிலையில் அது விதை (பீஜம்) வடிவாக உள்ள நிலையைத்தான் '**அவ்யக்தம்**' என்று சாஸ்திரம் அழைக்கிறது.

## காரண சரீரம்

அதாவது, காரண சரீரம் வெளிப்படாத நிலையில் அவ்யக்தமாக இருக்கின்றது.

இதுதான், நாம் ஆழ்ந்து உறங்குபோது நிகழ்கிறது.

அதாவது, நாம் உறங்கும்போது, நம்முடைய மனம் மற்றும் உடல் அந்த காரண சரீரத்தில் ஒடுங்கி விடுகிறது.

அதாவது, நம்முடைய விழிப்பு நிலையில், இந்த ஸ்தூல சரீரத்தினால், நாம் பெற்ற அனுபவங்கள்யாவும் ஒரு விதையாக, அதாவது, வெளிப்படாமல் அவ்யக்தமாக ஒடுங்குகின்றன.

அதுப்போன்றே, கனவு நிலையில் சூக்கும சரீரத்தினால், நாம் பெற்ற அனுபவங்கள் யாவும் ஒரு விதைப்போன்று அவ்யக்தமாக ஒடுங்குகின்றன. இவ்வாறு ஒடுங்கும் இடமே **காரண சரீரம்** ஆகும்.

இந்த **விழிப்பு,** மற்றும் **கனவு** நிலை அனுபவங்கள் யாவும், ஆழ்ந்த உறக்க நிலையில் தோன்றாமல் இருக்கின்றன. அதாவது, தூல தேகத்துக்கும், சூக்கும தேகத்துக்கும் இருக்கும் எல்லா உணர்ச்சிகளும் ஒடுங்கிய நிலை இந்த **ஆழ்ந்த உறக்க நிலை** எனலாம்.

அதாவது, **மனம், புத்தி, சித்தம், அஹங்காரம்** ஆகிய எல்லாமே விதை வடிவில், பீஜமாக ஒடுங்கிய நிலை **ஆழ்ந்த உறக்கம்** ஆகும்.

## காரண சரீரம்

நாம் உறக்கத்திலிருந்து விழிப்பு நிலைக்கு வரும்போது, நாம் காரண சரீரத்தை விடுத்து, தூல சரீரத்தை அபிமானிக்கின்றோம். உடனே, அதுவரை, பீஜங்களாக, அதாவது விதைகளாக ஒடுங்கியிருந்த அனுபவங்கள் யாவும், வளர்ந்து விரிவடைகின்றன.

அதாவது வ்யக்தமாகின்றன. ஆக வெளிப்படுகின்றன எனலாம்.

பொதுவாக, நாம் உறக்கத்திலிருந்து கனவு நிலையை அடையும் போது, காரண சரீரத்தை விடுத்து, சூக்கும சரீரத்தை அபிமானிக்கின்றோம். அப்போதும், அதுவரை விதைகளாக நம்மில் ஒடுங்கியிருந்த அனுபவங்கள் யாவும், வளர்ந்து விரிவடைகின்றன. அவைகள் கனவுகளாக காணப்படுகின்றன.

அவ்வாறே, நாம் உறக்கத்தில் விழிப்பு நிலைக்கு விழித்தவுடன், உறங்குவதற்கு முன்பு நின்ற நினைவுகள் யாவும், மீண்டும் விட்ட இடத்திலிருந்தே தொடர்கின்றன. அத்துடன், பல நேரங்களில் நம் கனவு அனுபவங்கள் கூட விழித்த பின்னும், நினைவில் இருக்கின்றன.

ஆக, நாம் எப்போதெல்லாம், காரண சரீரத்துடன் சம்பந்தப்பட்டு இருக்கின்றோமோ, அப்போதெல்லாம், எவ்வித புற அனுபவமும் இன்றி, ஏதும் அறியாத நிலையில் (ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பது போல) இருக்கின்றோம். இந்த நிலை **அறியாமை நிலை** அல்லது **அவித்யை நிலை** எனப்படும்.

## காரண சரீரம்

பொதுவாக, எண்ணங்களினால் உண்டாகின்ற மனோ விகாரங்கள் காலம் மற்றும் இடத்தை ஆதாரமாகக் கொண்டே உண்டாகின்றது.

ஆனால், உறக்கத்தில், நாம் **காலம், இடம்** ஆகியனவற்றை உணராமலேயே இருக்கின்றோம். ஆகவே, காரண சரீரம் என்பது, இடம், காலம் ஆகியவைகளை அறியாத நிலையில் (அறியாமையில்) நம்மோடு சம்பந்தப்படுகின்றது.

அதனால்தான், காரண சரீரம் மாறுதல் அடையாததாக உள்ளது.

நாம் உறங்கும்போது, ஆனந்தமாக உறங்குகிறோம் என்று உணர்வதில்லையே தவிர, விழித்தவுடன், நாம் அதுவரை ஆனந்தமாக உறங்கினோம் என்று உணரவே செய்கிறோம்.

சரி!, நாம் உறங்கும்போது ஆனந்தமாக இருந்தோம். அதாவது, எப்போதெல்லாம் ஸ்தூல, சூக்கும சரீரங்களை விடுத்து, காரண சரீரத்தை மட்டும் அபிமானிக்கின்றோமோ?, அப்போதெல்லாம் ஆனந்தமாக இருக்கிறோம்.

ஆக, ஆழ்ந்து உறங்கும்போது ஸ்தூல சரீரமும், சூக்கும சரீரமும், செயல்படாது ஓய்ந்து விடுகின்றன. உடனே, நாம் ஆனந்தமயமாகிறோம். அத்துடன், உறக்கத்தில் எல்லா இந்திரியங்களும் ஒடுங்கி விடுகின்றன.

மேலும், இந்த ‘**நான்**’ என்ற நம் புத்தியின் விருத்தியும் ஒடுங்கி விடுகின்றது. நாம் முழு அறியாமையில் இருக்கின்றோம்.

ஆக, உறக்கத்தில் காரண சரீரத்தை முழு அறியாமையில் அபிமானித்து இருக்கிறோம் என்பதை அறிய முடிகிறது.

எனவே, உறக்கம் என்பது ஆனந்தம் தருவது என்பதினால், அதுவே, நிலையான ஆனந்தம் என்று தவறாக பொருள் கொள்ளக்கூடாது. அதேசமயம், நம், நித்திய அனுபவங்களில், உறக்கம் ஒன்றே, ஆனந்தத்திற்கு வெகு அருகில் அனுபவமாகின்றது.

ஆக, உறங்கும்போது வருகின்ற ஆனந்தம் எதன் ஆதாரத்தில் விளைகின்றது என்று தெரிந்து கொண்டால், அதை மீண்டும், மீண்டும் அடையலாமே, முடிந்தால் அதிலேயே நிரந்தரமாக, லயித்திருக்கலாமே! என்று எண்ணத் தோன்றுகிறது அல்லவா?

உண்மையில் உறக்கத்தில், அறியாமையில் காரண சரீரத்துடன் நமக்கு ஏற்படும் தொடர்பு, விழித்தபின், சில நொடிகளுக்கே நிலைக்கின்றது. ஆகவே, உறக்கத்தால் விளைந்த ஆனந்தத்தின் இருப்பும், நேரமாக, ஆக நீர்த்துப் போகிறது.

## காரண சரீரம்

இவ்வாறே, விழிப்பு நிலையில் இருக்கும் போது, சில நேரங்களில், காரண சரீரத்தை அபிமானிக்கின்றோம்.

அந்த நிலைகளை, **ப்ரியம், மோதம், ப்ரமோதம்** என மூன்று நிலைகளாக சாஸ்திரம் அறிவுறுத்துகின்றது.

இதில், நமக்குப்பிடித்த, நாம் ஆசைப்படும் பொருளைக் காண்பதால் ஏற்படும் மகிழ்ச்சி '**ப்ரியம்**' எனப்படும். அந்தப்பொருள் நம் கைக்கு கிடைத்து நம்முடையது என்று ஆவதால் உண்டாகும் மகிழ்ச்சி, '**மோதம்**' எனப்படும். அந்தப் பொருளை நாம் அனுபவிப்பதால் ஏற்படும் மகிழ்ச்சி '**ப்ரமோதம்**' எனப்படும்.

இந்த மூன்று நிலைகளிலும், நம்முடைய மனம் **ஆனந்தம்** அடைகிறது என்பதை நாம் நன்கு அறிவோம்.

அதாவது விழிப்பு நிலையிலும் நாம் காரண சரீரத்தை அபிமானிப்பதாலேயே இந்த ஆனந்தம் உண்டாகிறது என்பது தற்பொழுது நன்கு விளங்கும். அத்தகைய இந்த காரண சரீரமே "**ஆனந்தமய கோசம்**" எனப்படுகின்றது.

ஆனாலும், இந்த ஆனந்தமும், அறியாமையில் விளைந்த ஆனந்தமே ஆகும்.

ஏனெனில், அந்தச் சில கணங்கள், நாம், நம் புத்தி நிலை கொண்டுள்ள சூக்கும தேகத்தின் தொடர்பில்லாமல் தான்

இருந்தோம். அப்பொழுது, காரண சரீரத்தை மட்டுமே முழுவதுமாக அபிமானித்து இருக்கின்றோம் என்பதினால், நாம் அறியாமையிலேயே இருக்கின்றோம். ஆதலால்தான், அந்த ஆனந்தமும் நமக்கு நிலைப்பதில்லை.

எனவே, எண்ணங்களற்று, எல்லையில்லா அந்த உணர்வுடன் பொருந்தி இருக்கிற நிலையே **உண்மையான ஆனந்தம்** எனப்படும்.

இதில், எதையாவது அடைய விரும்பும் எண்ணம் நம் மனதில் உண்டாகி, அந்த எண்ணம் செயலாகி, அந்த செயல் நிறைவடைந்தவுடன், உண்டாகின்ற திருப்தி என்பது, நாம் நம் உணர்வுடன் ஒன்றாக இணைந்து விடுவதினால் உண்டாகிறது என்பதினால், எண்ணங்களற்று, உணர்வு மாத்திரமாக நாம் மாறியதும் ஆனந்தத்தில் திளைக்கிறோம்.

அப்பொழுதே முழுமையான ஆனந்தமயமாகிறோம்.

ஆனால், மீண்டும், மீண்டும் எண்ணங்கள் எழ, எழ, நம் மனம் பிரவிருத்தியாகி, ஆனந்தத்தை மறக்கிறோம். அதற்குக் காரணம் மனிதன் பெரும்பாலும், இந்த புறவுலகைப் பற்றி ஆராய்கிறான். ஆனால், அவன் தன்னைப் பற்றிய அக ஆய்வில் ஆர்வம் செலுத்துவதில்லை.

நம்மைப் பற்றிய உண்மையை மறைத்து வைப்பது, நம்முடைய ஏற்றி வைக்கப்பட்ட ஏராளமான எண்ணங்களால் எழுந்த அறியாமையாகும். அந்த அறியாமையை அறிய

வேண்டுமானால், அவசியம் அதற்கான ஆர்வம் உண்டாக வேண்டும். அதற்கான ஞானம் வருகிற பொழுதுதான் உடல்களில் இருந்து, நம்மை நாம் பிரித்துக் காண முடியும்.

ஆனால், அறியாமைகளில் சிக்கிக் கொண்டுள்ள நாம் இதுப்போன்ற சரீரங்களைப் பற்றி அறிந்துக் கொள்ளாமல், இதுப்போன்ற சரீராதிகளிலிருந்து நம்மைப் பிரித்துகொள்ளத் தெரியாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

எவ்வாறு, நம் உடம்பை மறைப்பதற்குப் பனியன், அதற்குமேல் சட்டை, அதற்குமேல் கோட்டு ஆகியவைகளை அணிந்திருப்பது போன்று, ஆத்மாவை மூடிக்கொண்டு **காரண சரீரம், சூக்கும சரீரம், தூல சரீரம்** ஆகிய சரீரங்கள் இருக்கின்றன.

சரீரத்தின்மீது அணிந்திருக்கின்ற கோட்டை அகற்றினால் சட்டையும், பனியனும் மூடிக்கொண்டிருக்கும். சட்டையையும் அகற்றிவிட்டால், அடுத்து பனியன் சரீரத்தை மூடிக் கொண்டிருக்கும். அந்த பனியனையும் அகற்றினால்தான் நம்முடைய சரீரம் நமக்குத் தெரியும்.

அவ்வாறு, தூல சரீரம் போய்விட்டால் சூக்கும, மற்றும் காரண சரீரங்கள் ஆத்மாவை மறைத்துக் கொண்டிருக்கும். அந்த சூக்கும சரீரமும் நீங்கினால், காரண சரீரம் மட்டும் ஆத்மாவை மறைத்துக் கொண்டிருக்கும்.

அந்த காரண சரீரமும் அகலும்பொழுது மட்டும்தான் **ஆத்மா** பிரகாசிக்கும்.

தூல சரீரம் என்பது நம் கண்ணுக்குத் தென்படும் பூதவுடலாகும். இது, தோல், இரத்தம், மாமிசம், நரம்பு, எலும்பு, கொழுப்பு ஆகியவை சேர்ந்து தூல சரீரமாகிறது.

அத்துடன், **மனம், புத்தி, சித்தம், அகங்காரம்** என்பவை சூக்கும சரீரமாகும்.

ஞானேந்திரியங்கள் ஐந்தும், வாயுக்கள் ஐந்தும், கர்மேந்திரியங்கள் ஐந்தும், சூக்ஷ்ம சரீரத்தில் அடங்கும்.

பஞ்ச கர்மேந்திரியங்கள், பஞ்ச வாயுக்கள், பஞ்ச ஞானேந்திரியங்கள், மற்றும் இந்த தூல சரீரம் ஆகியவற்றின் துணை கொண்டு சூக்கும சரீரம் புறவுலகத் தொடர்பை புத்திக்கு ஏற்படுத்துகிறது.

மனிதனுக்குக் கீழ் நிலையில் உள்ள உயிரினங்களுக்கு தூல சரீரம் இருந்தும் அவைகளுக்கு அதைப் பற்றிய அறிவு இருக்காது. ஆனால், மனிதன் தன்னிடம் ஏற்றி வைத்துக் கொண்ட ஏராளமான எண்ணங்களால், தன்னை இந்த உடலாக பாவித்துக் கொள்கிறான்.

அவ்வாறு அவன் தன்னை சரீரமயமாக எண்ணிக் கொண்டிருப்பது, அவனது அறியாமையே ஆகும். இதை நீக்கத்தான் சாஸ்திரமும், சத்குருவும் தேவைப்படுகிறது.

## காரண சரீரம்

ஒரு உடல் அதன் வாழ்க்கைக்குத் தகுதியற்றதாகப் போய்விட்டால் அதை ஒதுக்கித் தள்ளுவதை **மரணம்** என்றும், அந்த உடல் வாயிலாக உண்டாக்கி கொண்ட எண்ணங்கள் வாழ்க்கைக்குத் தகுதியுடையதாக மற்றொரு சரீரத்தை உண்டு பண்ணிக் கொள்வதை **ஜனனம்** என்றும் சொல்கிறோம்.

ஒரு உடலை ஒதுக்கிவிட்டு மற்றொரு புதிய உடல் எடுப்பதற்கு இடையிலுள்ள காலத்தில் இறந்து போனவன் என்ன ஆனான்? என்பதுதான் மரணத்திற்குப் பின் தன் நிலை என்ன...? என்ற கேள்வியாக எல்லோருக்கும் எழுகிறது.

தற்போது எடுத்துள்ள உடல் அழிந்து, மற்றொரு உடல் எடுக்கும் வரையில், அவனது ஏற்றி வைக்கப்பட்ட ஏராளமான எண்ணத் தொகுப்பாக சேகரிகப்பட்ட மனம் காரண சரீரமாக ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பது போன்று, அப்படியே ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறது.

அந்த இடைக்காலத்தில் அவனது **சூக்குமசரீரம்** ஆகிய மனம், கனவில் ஒரு உலகத்தைப் படைத்துக்கொள்வது போன்று, ஒரு உலகத்தைப் படைத்துக் கொண்டு அதிலேயே அலைந்து கொண்டிருக்கும்.

அதாவது, கனவு காண்கின்றவனுக்குத்தான் அந்த கனவைப் பற்றித் தெரியும். ஆனால், கனவு காணும் வரையிலும், அது கனவுதான் என்பது அவனுக்குத் தெரியாது.

அதாவது, அவன் எவ்வாறு, தற்போது வாழுகின்ற இந்த புறவுலகத் தொடர்பற்று உறக்கத்தில் கனவு கண்டு கொண்டு ஆழ்ந்து உறங்குகிறானோ?

அவ்வாறு, அவன் இந்த ஸ்தூல சரீரத்தை விட்டு, அவனது ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்களாகிய சூக்கும சரீரமாகிய மனதைக் கொண்டு, ஒரு கனவு உலகத்தைப் படைத்துக்கொண்டு, அதில் பயணித்துக் கொண்டிருப்பான்.

இந்த உலகில் எப்படி ஒருவன் உறக்கத்தில் கனவு காண்பதை, விழிப்பு நிலையில் உள்ள மற்றொருவன் அறிய முடியாதோ, அவ்வாறே, இறந்துப் போனவன் இருக்கின்ற கனவு உலகத்தை, இங்கே உயிருடன் இருக்கின்ற மற்றவர்கள் அறிய முடியாது.

ஆக, அவரவர்கள் மட்டுமே அவர்களது நிலைப்பாட்டை அறிய முடியும் என்பதினால், எவன் ஒருவன் அரிதான இந்த மனிதப் பிறவியை பயன்படுத்தி, நன்மை, தீமைகளைப் பகுத்தறிந்து, அந்த பரத்தைப் பற்றி அறிந்துக்கொண்டு, அந்த ஆதியைத் தன்னுள் உணர்ந்துக் கொள்கிறானோ, அவன் மட்டுமே மீண்டும் பிறவாது, அந்த பரத்தினைச் சார்ந்து விடுகிறான்.

இதுவே, "**விதேக முக்தி**" எனப்படுகிறது.

## காரண சரீரம்

பொதுவாக, ஒருவன் தான் வாழும் காலத்தில் எத்தகைய எண்ணங்களையெல்லாம் ஏற்றி வைத்துக்கொண்டு, அதற்கேற்ப மனம் போன போக்கிலே வாழ்கிறானோ?, அது அவனை மேலும், மேலும் பிறப்பு – இறப்பு என்ற சம்ஸார சாகரத்தில் ஆழ்த்தும்.

அத்தகைய ஏற்றி வைத்துக் கொண்ட அறியாமை எண்ணங்களினால் ஆட்கொள்ளப்பட்ட அவனது மனம், அவனது இறுதிக் காலத்தில், அவைகளை விட முடியாமல் பற்று கொண்டு, முன்னணியில் வந்து நிற்கிறது.

அத்தகைய எண்ணங்களின் அடிப்படையில் அவனது அடுத்த பிறப்பும், அதற்கேற்ற ஸ்தூல உடலும் அவனுக்கு உண்டாகிறது.

ஆக, தேஜோமயமான சுயம்பிரகாசமுடைய அறிவாகிய ஆத்மனை உணர்வுமயமாக நம் உள்ளத்தில் ஏற்றி, அனுதினமும் அந்த **“உணர்வே நான்”** என்றும், என்னுடைய உணர்வு போன்றே, படைக்கப்பட்ட எல்லாவற்றிலும் அந்த உணர்வே உயிராக இருக்கிறது என்றும், மற்றவர்களின் உணர்வுக்கும் மதிப்பு கொடுத்து, மகிழ்ச்சியாக வாழவும் முடிகிறது.

அவ்வாறு, ஆத்ம போதத்தை அனுதினமும் வளர்த்து வருகின்றவனுக்கு, எவ்வாறு பழுத்த பழமானது தன்மீதுள்ள தோலை எளிதாக நீக்க ஒத்துழைப்பு கொடுக்கிறதோ?, அவ்வாறு, அவனும் தன் தனித்துவமான தேகாபிமானம் என்ற

தோலை நீக்கித் தன்னுணர்வு மயத்தை உணர்ந்துக் கொள்ளவும் முடியும்.

ஆக, மனதை உலக ஆசையிலிருந்து பிரித்து எடுத்துப் பகவானிடத்தில் நிலை பெறச் செய்துவிட்டால் “**எல்லாம் இன்பமே**” என்ற அடிப்படையில், இந்த ஸ்தூல சரீரத்தோடு வாழ்ந்தாலும் சரி!, அல்லது ஸ்தூல சரீரம் போனபின்பு யாதனா சரீரமாகிய சூக்கும சரீரத்தில் வாழ்ந்தாலும் சரி!, தற்போது கிடைத்துள்ள இந்த பரு உடலின் வாயிலாக அமைதியுடனும், ஆனந்தத்துடனும் இருக்க, அவனது மனதைப் பண்படுத்த வேண்டும்.

அவ்வாறு, அந்த தனித்துவமான **வியஸ்டி மனம்** தன் மூலத்தை உணர்ந்துக் கொண்டால், தன் தனித்துவத்தை இழந்து, ஈஸ்வரனாகிய இந்த ஒட்டு மொத்த காரண சரீரமாகிய **சமஸ்டி மனம்** என்ற பிரபஞ்ச மனத்தில், அதாவது ஈஸ்வர சரீரத்தில் அடைக்கலம் அடைந்து விடுகிறது. அதாவது, அது தன் மூலத்துடன் இரண்டறக் கலந்து விடுகிறது.


ஆக, இந்த ஒட்டுமொத்த காரண சரீரமும் ஈஸ்வரனுடைய சித்தம் என்பதினால், அனைத்து உயிரினங்களின் தனித்தனி சரீரங்களாகிய அவைகளின் ஒட்டு மொத்த உடலை தன்னுடைய விஸ்வரூப உடலாகக் கொண்ட ஈஸ்வரன் ஒருவனே எல்லாமாக இருக்கிறான் என்பதை ஏற்றுக் கொள்கிற மனம் தன் தனித்துவத்தை இழந்து, தன்னுடைய தன்முனைப்பை இழந்து தன் மூலத்திற்கு திரும்பி விடுகிறது.

இனி அது பிறப்பதும் இல்லை, இறப்பதும் இல்லை. வருவதும் இல்லை, போவதும் இல்லை. அது என்றென்றும் இருக்கின்ற ஒன்றேயாகிய உன்னத உணர்வாகிய "**ஆத்மா**" என்று தன்னை அறிந்துக் கொள்கிறது.

அதுவே ப்ரம்மம்.
அதுவே அறிவு.
அதுவே, இறைவன்.

**ஓம் தத் சத்!**

# காரண சரீரம்



ப்ரக்ஞன்